பக்கங்கள் 19+2

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 05 வியாழக்கிழமை 21.08.2025 | அதிர்வு 21



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இன்று தேரேறி அருள்பாலித்த நல்லூரான்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று காலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.15 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று ஆறுமுகப் பெருமான் வள்ளி – தெய்வானை சமேத ராய் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தேர்த் திருவிழாவில் புலம்பெயர் நாடுகள் மற்றும் இலங்கையின்

02▶

# நாமலின் நரி நாடகம் வெறும் கனவு மட்டுமே!

## அநுர அரசு போட்டுத் தாக்கு



“தனது தந்தையின் முதுமையைக்கூட அரசியல் இருப்புக்காக நாமல் ராஜபக்ஷ பயன்படுத்தி வருகின்றார். அனுதாபம் மூலம் அரியணையேறும் நாமலின் நரி நாடகம் மக்கள் மத்தியில் எடுபடாது.”

- இவ்வாறு பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“மஹிந்த ராஜபக்ஷவுக்குப் போதுமானளவு சொத்துகள் உள்ளன.

05▶

# இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இன்று தேரேறி அருள்பாலித்த நல்லூரான்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல பாகங்களில் இருந்தும் இலட்சக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு ஆறுமுகப் பெருமானின் அருள் காட்சியைக் கண்டுகளித்தனர்.

தேர்த் திருவிழாவின் போது ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப் பிரதஷ்டை, அடியழித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், காவடி எடுத்தல் எனத் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.
































# தென்னக்கோனுக்கு விளக்கமறியல்

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென னக்கோன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மிரிஹான பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டக்காரர் கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டி ருந்தார்.

இது தொடர்பாகத் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு உத்தரவிடக் கோரி தேசபந்து தென்னக்கோன் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்பிணை மனுவைத் தாக்கல் செய்தி ருந்தார்.

ஆனால் தேசபந்து தென்னக் கோனின் முன் பிணை மனு நீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென னக்கோன் குற்றப் புலனாய்வுப் பிரி வின் அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டு இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.



# வீதியில் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம்

வவுனியா, நெடுங்கேணி – முல்லைத் தீவு பிரதான வீதியில் இருந்து குடும்பஸ் தர் ஒருவரின் சடலம் காயங்களு டன் மீட்கப்பட்டுள்ளது.

அந்த நபர் அந்தப் பகுதியில் உள்ள மில் ஒன்றில் பணிபுரிந்து வருகின் றார். கடந்த 18 ஆம் திகதி இரவு அவர் பணிமுடிந்து வெளியில் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் முல்லைத்தீவு பிர தான வீதியில் அமைந்துள்ள பாலத் தின் கரையில் அவரது சடலம் காயங் களுடன் மீட்கப்பட்டுள்ளது.

அவரது சடலத்துக்கு அண்மை யில் வாகனம் ஒன்றின் உதிரிப்பாகங் கள் உடைந்த நிலையில் காணப்படு கின்றன. அவரை வாகனம் ஒன்று மோதித் தள்ளி விட்டு நிறுத்தாமல் சென்றுள் ளது என்று பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

கனகராயன்குளம், பெரியகுளத் தைச் சேர்ந்த ச.ரவிக்குமார் என்ற 45 வயதான குடும்பஸ்தரே சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பல்வேறு கோணங்களில் நெடுங்கேணி பொலி ஸார் தீவிர விசாரணைகளை முன்னெ டுத்து வருகின்றனர்.







# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு ‘முரசு’ குழுமம் வழங்கிய தாக சாந்தி

யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு "முரசு" குழுமத்தால் தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டு குளிர்பானம் வழங்கப்பட்டது.

நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள "முரசு" அலுவலகத்தின் முன்றலில் தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டு ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களின் தாகத்தைத் தீர்க்கும் வகையில் குளிர்பானம் வழங்கப்பட்டது.























# நல்லூர் கந்தன் ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றுக்கு வன்முறைக் கும்பல் தீ வைப்பு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடொன்றினுள் இன்று காலை வேளை புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டில் இருந்த தள பாடங்களுக்குத் தீ வைத்துள்ளது.

நல்லூர் ஆலயத்துக்கு 500 மீற்றர் தூரத்தில் உள்ள வீடொன்றில் வசிக்கும் குடும்பத்தினர் இன்று காலை நல்லூர் தேர்த் திருவிழாவுக்குச் சென்ற சமயம், வீட்டில் யாருமில்லாத நேரம் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டின் வரவேற்பறையில் காணப்பட்ட தள பாடங்களுக்குத் தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டில் இருந்து பெரும் புகை வருவதை அவதனித்த கோயிலுக்குச் சென்றவர்கள், அயலவர்களுக்கு அறிவித்தது, அயலவர்களுடன் இணைந்து தீயை அணைத்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்து ஆலயத்துக்குச் சென்ற வீட்டாரும் வீடு திரும்பினர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**நாமலின்...**

கடந்த காலங்களில் சட்டவிரோதமாகவும் சொத்துக்களைத் திரட்டினார்கள். நாடு முழுவதும் சொத்துக்கள் குவிந்து கிடக்கின்றன.

எனினும், தற்போது மாளிகையில் இருந்து வெளியேறுவது தொடர்பில் நரி நாடகம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததால் மக்கள் மத்தியில் மஹிந்தவுக்கு ஓரளவேனும் கௌரவம் இருந்திருந்தால், அந்தக் கௌரவமும் தற்போது இல்லாமல் போயுள்ளது.

எனவே, நரி நாடகங்களை அரங்கேற்றி இனியும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை நாமல் புரிந்து கொள்ள வேண்டும்.

வயோதிப நிலையில் இருக்கும் தனது தந்தையை தனது அரசியல் தேவைக்காக நாமல் பயன்படுத்துகின்றார்." - என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிள்ளையார் கல்யாணம்

இலங்கை அரசியலில் கடந்த பல தசாப்தங்களாக ‘பிள்ளையார் கல்யாணம் போல’ நாளை, நாளை என்று நடக்காமல் தள்ளிப் போகும் ஒரு விடயம் இருக்கும் என்றால் அது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படுவது என்பதாகத்தான் இருக்கும்.

1978ஆம் ஆண்டு முதல் 47 ஆண்டுகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் மிக மோசமான - மிகக் கொடூரமான - மிகக் குரூரமான - மனிதாபிமானமற்ற - மிருகத்தனமான - ஒரு சட்டமாக விளங்குகின்றது இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்.

அதை நீக்குவது என்றும், அதை மாற்றீடு செய்வது என்றும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேல் இந்த நாட்டில் நடக்கும் தொடர் அரசியல் திருவிழாக்கள் சிரிப்புக்கிடமானவை. ஒவ்வொரு தடவையும் ஆரவாரமாக ஏற்பாடு நடக்கும். மாற்றீட்டுக்கான சட்டம் பெரும் எடுப்புடன் தயாராகும். ஆனால் புதிய சட்டத்தின் நடைமுறையாக்கமோ பழைய சட்டத்தை நீக்குவதோ செயலுருப் பெறாது. எல்லாம் இறுதிக் கட்டத்துக்கு வந்த நிலையில் முடங்கிப் போகும். அந்த வகையில் இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பிள்ளையார் கல்யாணம் போல நாளை நீக்கப்படும், நாளை நீக்கப்படும் என்று கதையாக இழுபடுகின்றது.

அந்த வரிசையில் இந்த அரசும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குகின்ற திருவிழாவை ஆரம்பித்து இருக்கின்றது. இம்முறையாவது அது ஒப்பேறி முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதுதான்.

அதிகாரத்துக்கு வருகின்றவர்கள் தங்களுடைய அதிகாரத்தைக் குறுக்கு வழியில் - எதேச்சாதிகாரமாக - பிரயோகிப்பதற்கு இந்தச் சட்டம்தான் வசதியானது. அதனால் ஆட்சிக்கு வர முன்னர் இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று துடியாய்த் துடிப்பவர்கள் அதிகாரத்துக்கு வந்ததும் அதை நீக்குவோம் என்று வெறும் பாசாங்கு மட்டும் பண்ணுவதும் தொடர்கதையாக நீடிக்கின்றது.

இப்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் அவரின் தேசிய மக்கள் சக்தியினரும் கூட எதிரணித் தரப்பில் இருந்தபோது இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மூர்க்கமாக எதிர்த்தார்கள். இது முழுமையாக நீக்கப்பட வேண்டும், அதற்கு மாற்றீட்டுச் சட்டமே வரக் கூடாது என்று ஒற்றைக் காலில் நின்றார்கள். இப்போது கதையைப் புரட்டிப் போட்டு மாற்றீட்டுச் சட்டம் பற்றிப் பேசுகிறார்கள்.

புதிய பயங்கரவாத தடைச் சட்ட மூலம் விரைவில் தயாரிக்கப்பட்டு இறுதி செய்யப்படும் என்று அது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு இப்போது தெரிவித்துள்ளது.

புதிய பயங்கரவாத தடைச் சட்டமூல வரைவை தயாரிப்பதற்காக அமைச்சரவையின் ஒப்புதலின் கீழ் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் நீதி அமைச்சில் அண்மையில் கூடியது. இதன்போது சட்டமூலத்தில் கொண்டு வரப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நெரின் புள்ளே, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அசங்க கரவிட்ட, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பியமுந்தி பீரிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பயங்கரவாத தடைச் சட்டமூல வரைவு குழு இதுவரை 14 முறை கூடியுள்ளதுடன், அதன் அடுத்த கலந்துரையாடல் நாளை இடம்பெறவுள்ளது.

சட்டமூல வரைவு தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்கள், சிவில் சமூக அமைப்புகளின் கருத்துக்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் கருத்துக்களைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இம்முறையாவது விடயம் கரையேறுமா என்று பார்ப்போம்.

# வடக்கு தொழில் துறைத் திணைக்களத்தால் 50 வீத மானியத்துக்குத் தையல் இயந்திரம்





வடமாகாண தொழில்துறை திணைக்களத்தின் மாதிரி கிராம வேலைத் திட்டத்தின் கீழ் கோவில்குடியிருப்பு மற்றும் தனங்களப்பு, அல்லாரை கிராம அலுவலர் பிரிவுகளில் 50 வீத மானிய அடிப்படையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேசத்தில் கோவில்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் 7 பயனாளிகளுக்கும் பிஎஸ்டிஜி திட்டத்தின் கீழ் தனங்களப்பு , அல்லாரை கிராம சேவகர் பிரிவில் ஒவ்வொரு பயனாளிக்கும் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டுதையல் இயந்திரங்களை வழங்கிவைத்தனர்.






# மருதமுனையின் பாரம்பரிய வரலாற்றைப் பாதுகாக்க ‘ஹெரிடேஜ் மருதமுனை’ இணையதளம் உருவாக்கம்

**(ஏ.எல்.எம்.ஷினாஸ், றாசிக் நபாயிஸ்)**

இலங்கையின் கிழக்கு மாகாண புராதன ஊர்களில் ஒன்றாக இருந்து வருகின்ற மருதமுனையின் வரலாற்றுப் பாரம்பரியத்தை டிஜிட்டல் வடிவில் பாதுகாக்கும் ‘ஹெரிடேஜ் மருதமுனை’ (HERITAGE MARUTHAMUNAI) எனும் இணையத்தள அங்குரார்ப்பண அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிறு மாலை மருதமுனை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

ஹெறிடேஜ் மருதமுனை எனும் இணையத்தளம் மிகவும் தொன்மையான வரலாற்று பாரம்பரியத்தை கொண்ட மருதமுனையின் முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள், நூல்கள், புகைப்படங்கள், கட்டுரைகள் மற்றும் ஆளுமைகள் என ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்ற மருதமுனை மண்ணின் பாரம்பரிய புராதன தகவல்களை எல்லாம் உள்ளடக்கியதாக எல்லோராலும் இலகுவில் அணுகிப் பெறக்கூடிய வகையில் மருதமுனையின் பாரம்பரியமும் புராதனச் சிறப்புகளும், ஊரின் கலாசார மரபும் வருங்கால தலைமுறைகள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் மூன்று கால கட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணி றுடானி ஸாஹிரின் தலைமையில், ஹெறிடேஜ் மருதமுனை குழும உறுப்பினர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்த இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வின்போது, ஓய்வுநிலை யாழ்ப்பாண வடமாகாணத்திற்கான குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி ரி.எல்.அப்துல் மனாப் இணையத்தளத்தை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆவணத் தொகுப்பாளர்கள், ஊர் நலன் விரும்பிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததோடு தங்களது ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் முன்வைத்தனர்.













# நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சுகாதார நடமாடும் சேவை

## முன்னாயத்தக் கலந்துரையாடல் முன்னெடுப்பு





நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் எதிர்வரும் செப்ரெம்பர் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள விசேட சுகாதார நடமாடும் சேவை தொடர்பாக துறைசார் அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் திரு மதி. நிவேதிகா கேதீசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் கலந்து கொண்டு நிகழ்வு தொடர்பான விளக் கங்களை வழங்கியிருந்தார்.

வேலணை மற்றும் ஊர்காவற்துறை சுகாதார மருத்துவ அதிகாரிகளும் நெடுந் தீவு பிரதேச வைத்திய அதிகாரியும் கலந்துகொண்டிருந்தனர்.

இவர்களுடன் நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினர்கள், பொலிஸார், கடற்படை அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர், நெடுந்தீவு செஞ்சிலுவை சங்கத்தினர், ஆயுள்வேத வைத்தியர், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பிரசன்னமாயிருந்தனர்.






# யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் 2025இன் பண்பாட்டுப் பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய 2025ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று (20) யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் கௌரவ விருந்தினராக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோசெப் யோன்சன் ராஜ்குமாரும் கலந்து கொண்டனர்.

கலாபூஷணம் நீக்கிலஸ் மரியதாஸ் பாலச்சந்திரன் அரங்கில் இடம்பெற்ற இந்த ஆண்டுக்கான பண்பாட்டு விழாவானது பல்வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களையும் உள்ளடக்கியிருந்தது.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி முன்றலில் இருந்து பண்பாட்டு ஊர்வலத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழ் தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம் (திருமறை கலாமன்றம்), மங்கல இசை, கிராமியப் பாடல், இஸ்லாமிய நடனம், இசைச்சங்கமம், நாட்டிய அர்ப்பணம் நடனம் (கிழவன்காடு கலாமன்றம், யாழ்ப்பாணம்), வாத்திய பிருந்தா (கீதவாகினி இசைக் கல்லூரி, கொழும்புத்துறை), வட மோடி நாட்டுக்கூத்து (யாழ்ப்பாண பிரதேச மழலைக் கலைஞர்கள்) என்பன சிறப்பாக நடைபெற்றன.

மூத்த கலைஞர்களுக்கான “யாழ் ரத்தினா விருது” மற்றும் இளங்கலைஞர்களுக்கான “கலைத்திறன் விருது” என்பன அரச அதிபரால் வழங்கப்பட்டன.

“யாழ் பாடி” கலாசார மலரையும் அரச அதிபர் வெளியிட்டு வைத்தார்.

நிகழ்வில் கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.


















# தேசிய ரீதியான துடுப்பாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில்!





தேசிய ரீதியான துடுப்பாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வின் மாவட்ட நிகழ்வு யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் . ஏ. எஸ். நிசாந்தன் தலைமையில் நேற்று (20) மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு அதுவும் துடுப்பாட்ட வளர்ச்சிக்கு மெரு கூட்டுவதாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது. இலங்கை துடுப்பாட்டச் சங்கம் துடுப்பாட்ட வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகிறது. சர்வதேச தரத்தில் துடுப்பாட்ட மைதானம் மண்டைதீவில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

விளையாட்டுத்துறை அமைச்சர் இரண்டு தடவைகள் மண்டைதீவுக்கு விஜயம் செய்து ஆராய்ந்துள்ளார். மைதானத்துக்கான காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் ஏனைய வசதிகளுக்கான மேலதிக காணிகள் தேவைப்படுவதால் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சர்வதேச மைதானம் வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கும. எமது மாணவர்கள் சர்வதேசம் மற்றும் தேசிய போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர். அந்த வகையில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவன் வியாஸ்காந் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும், இலங்கை 19 வயது அணியில் பரியோவான் கல்லூரி மாணவன் மாதுளன் மற்றும் ஹாட்லி கல்லூரி மாணவன் ஆகாஷ் ஆகியோரும் இடம் பெற்றுவருவதும் பாராட்டத்தக்கது.

உள்ளக விளையாட்டரங்கு அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு அமைச்சால் விடுவிக்கப்பட்டுள்ளது. எமது மாணவர்கள் அதன் மூலமும் தமது திறமைகளை மேன்மேலும் வளர்த்துக்கொள்ள முடியும். மாவட்டச் செயலகத்தால் விளையாட்டு மற்றும் கல்விக்கான நிதியம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான நிதியீட்டம் மேற்கொள்ளப்படும். அதன் மூலம் எமது மாணவர்களுக்கான தேவைப்பாடுகளை நிதியத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களை உள்ளடக்கிய உறுப்பினர்களின் சிபார்சின் அடிப்படையில் அரச அதிபரால் தேவைக்கேற்ற நிதி அனுமதிக்கப்படும். இதன் மூலம் உடனடித் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்ய வழி ஏற்படும். கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் எமது மாணவர்கள் முன்னேற வேண்டும்.- என்றார்.

இலங்கை துடுப்பாட்டச் சங்கம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் அனுசரணையுடன் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் தேசிய ரீதியான துடுப்பாட்ட உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே அவர்கள் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்ட நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளுக்கு துடுப்பாட்ட உபகரணங்களும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான காலணிகளும் அரச அதிபரால் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் உறுப்பினர்கள், பாடசாலைகளுக்கான பொறுப்பாளர், பாடசாலை அதிபர்கள், துடுப்பாட்ட பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# 'தம்பபவனி' காற்றாலைத் திட்டமே போதும் இனி மன்னாருக்கு வேறு திட்டம் வேண்டாம்!

## ரவிகரன் எம்.பி. சபையில் இடித்துரைப்பு

**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார்த்தீவின் தெற்குக் கரையில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக்கி ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 'தம்ப பவனி' எனும் காற்றாலைத் திட்டமே போதும் எனக் குறிப்பிட்ட வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இனி மன்னாருக்குகள் காற்றாலைத் திட்டம் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்ட மன்னார்த்தீவில் மீண்டும் காற்றாலைத் திட்டங்களை ஏற்படுத்தினால் அங்கு மக்கள் வாழமுடி யாத நிலை ஏற்படும் என்பது அங்குள்ள மக்களின் அபிப்பிராயம் எனக் குறிப் பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கரன், மன்னார்தீவு மக்களின் அபிப் பிராயங்களைக் கருத்திலெடுத்துச் செயற்படுமாறும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (21) உரையாற் றுகையிலேயே இவ்விடயம் தொடர்பில் பேசியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத் துத் தெரிவிக்கையில்,

மன்னார் மக்கள் இன்றோடு 19 நாள் களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு



வருகின்றனர். மன்னார்த்தீவில் காற் றாலை மின் உற்பத்திக் கோபுரங்களை அமைக்கக் கூடாதென வலியுறுத்தியே அவர்களால் இவ்வாறு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக கடந்த 13 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரை யாடியிருந்தோம். அதற்கமைய இந்தக் காற்றாலைத் திட்டத்தை ஒருமாத காலத் துக்கு இடைநிறுத்தி வைப்பதெனவும், இந்தத் திட்டம்தொடர்பில் உரிய தரப்பி னர் மக்களிடம் அபிப்பிராயங்களைப் பெறவேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே மன் னார்த்தீவின் தெற்கு கரையில் கடந்த 2020 ஆம் ஆண்டு "தம்பபவனி" எனும் பெயரில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக்கி இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்சக் திப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதனை விட மன்னார் தீவுக்கு வெளியேயும் வங் காலை மற்றும் நறுவிலிக்குளம் ஆகிய பகுதிகளிலும் 06 காற்றாலை மின்உற்பத் திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நாட்டின் பொருளா தாரத்துக்கும்நாட்டின்மின்சாரத்தேவைக்கு மாக ஏற்கனவே தம்மால் பாரிய பங்க ளிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதே மன் னார்த்தீவு மக்களின் அபிப்பிராயம். அத் தோடு சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்ட மன்னார்த் தீவில் மீண்டும் காற்றாலை மின்உற்பத்தி கோபுரங்களை நிறுவினால் மக்கள் மன்னார்த்தீவில் வாழமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதும் அந்த மக்களின் அபிப்பிராய மாகவுள்ளது.

எனவே இந்தவிடயத்தில் மன்னார்தீவு மக்களின் இந்த அபிப்பிராயங்களைக் கருத்திலெடுத்து நடவடிக்கைகளை முன் னெடுக்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன். – என்றார்.





# தொற்றா நோய்களைத் தடுப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்வு திருமலையில்

**(எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கம், "தொற்றா நோய்களைத் தடுப்பதற்காக மன ஆரோக் கியத்தை மேம்படுத்தல்" என்ற கருப் பொருளில் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத் தின் கீழ், அலுவலர்களுக்கான விழிப் புணர்வு நிகழ்ச்சியை, நேற்று (20) மாவட்ட செயலகத்தில் நடத்தியது.

மாவட்ட அபிவிருத்தி அதிகாரியும் ஊழியர் நலன்புரி சங்கத்தின் தலை வருமான எச்.சின்ஹா, மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார வின் அனுசரணையுடன் நிகழ்வை ஏற் பாடு செய்திருந்தார்.

இந்த நிகழ்வில்,கடற்படையின் உள வியல் போதானாசிரியர், லெப்டினன்ட் எச்.ஏ.கிருஷாந்த லக்மால் பிரதான வளவாளராகப் பங்குபற்றி பயிற்சிகளை வழங்கினார்.

"தொற்றா நோய்களைத் தடுக்க மன ஆரோக்கியத்தை மேம்படுத்தல்" என்ற கருப்பொருளுடன் தொடர்புடைய நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய், புற்றுநோய், சுவாச நோய் போன்றவை குறித்து அவர் விளக்கம் அளித்தார்.

நிகழ்வில் பங்குபற்றிய ஊழியர்க ளுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு, உடல் திணிவுச் சுட்டி (பி.எம்.ஐ.) சோதனை களும் செய்யப்பட்டன.

இந்தப் பரிசோதனைகளை திரு கோணமலை கடற்படை முகாமின் மருத் துவ பிரிவினர் நடத்தினர்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட செய லக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.






# மக்களை கொன்று விட்டு மின்சாரம் எதற்கு? மன்னாரில் காற்றாலை, கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 19ஆவது நாளாக தொடரும் போராட்டம்!

## மன்னார் தனியார் பஸ் உரிமையாளர்கள், ஓட்டோ சங்கத்தினர் ஆதரவு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று வியாழக்கிழமை (21) 19 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்க உறுப்பினர்கள் மற்றும் மன்னார் முச்சக்கர வண்டி சங்கத்தினர் ஆதரவு வழங்கிய நிலையில் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டம் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம்பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப் படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இன்று வியாழக்கிழமை (21) இடம் பெற்ற இந்தப் போராட்டத்தின் போது வெளிநாட்டு பிரஜை ஒருவர் கலந்து கொண்டு மக்களின் போராட்டம் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள்ளனர்.

போராட்டத்தை தொடர்ந்து மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இருந்து மாவட்ட செயலகம்வரை ஊர்வலமும் முன்னெடுக்கப்பட்டது.














# அட்டாளைச்சேனை கலாசார பிரிவினரின் பயிலரங்கு நிகழ்வு

(எம். எப்.நவாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார பிரிவால் நாடகப் பயிலரங்கு நிகழ்வானது அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ. சி.அப்கர் தலைமையில் ஒலுவில் அல் ஹம்ரா மகா வித்தியாலயத்தில் நடத்தப் பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் டி.எம். ரின்சான், பாடசாலை அதிபர் யு. கெ. ரஹீம், அட்டாளச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் எம். எஸ். ராஜாயா, எம். எஸ். ஜஃபர், எம்.எச். எம்.



முக்தார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் வளவாளராக கலைப்பிறை ஜெ.வஹாப்தின் கலந்து கொண்டார்.

கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தீகவாபி பிரதேசத்தில் சகவாழ்வு நிகழ்வுகள்

(எம். எப். நவாஸ்)

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முகமாக அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் ஏ.சி. அகமட் அப்கர் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. எம்.எம்.றிஸானின் ஒருங்கிணைப்பில் தீகவாபி கிராம சேவகர் பிரிவுகளில் சகவாழ்வு சங்கங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அத்துடன் தெரிவு செய்யப்பட்ட அஸ்வெசும பயனாளிகளுக்கான வங்கி கணக்கு ஆரம்பிப்பதற்கு உரிய அனுமதி பத்திரமும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தீகவாபி பரிவர சைத்திய விகாராதிபதி, பிரதேச சபை உறுப்பினர், காணி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், நலன்புரி நன்மைகள் தகவல் பிரிவு உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# முள்ளிவாய்க்காலில் அமையவுள்ளது மாற்றுவலுவுள்ளோருக்கான பாடசாலை!

## கட்டட வேலைக்கான நாள் கல்லு வைத்தல் நிகழ்வு





(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்று வலுவுள்ளோர் பாடசாலை ஒன்றின் தேவை தொடர்பாக மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு அமைவாக மாவட்ட செயலாளரால் சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்த முள்ளிவாய்க்காலில் அரசால் வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணியில் அமையவுள்ள மாற்றுவலுவுள்ளோர் பாடசாலை கட்டட கட்டுமான ஆரம்ப வேலைக்கான நாள் கல்லு வைத்தல் நிகழ்வு நேற்று (20) இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் ஆகியோர் கட்டட வேலைகளை ஆரம்பித்து வைத்தனர்.

# விபுலானந்தாவின் பவளவிழா நடைபவனியின் முதல் மூன்று சிறந்த அணிகளுக்கு பரிசில்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் பவளவிழா நடைபவனியின் போது தெரிவான முதல் மூன்று சிறந்த அணிகளுக்கு பரிசுகளும் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன.

அதி சிறந்த அணிகளாக முதலிடத்தை 2015 ஆம் ஆண்டு அணியும், இரண்டாம் இடத்தை 2016 ஆம் ஆண்டு அணியும், மூன்றாவது இடத்தை 2004 ஆம் ஆண்டு அணியும் பெற்றுக் கொண்டன.

அதில் முதலாவது பணப் பரிசை பெற்ற 2015 அணி தமக்கான பணப்பரிசை மீண்டும் பாடசாலைக்கே வழங்கி வைத்தது.

இந்த நிகழ்வு அதே மைதானத்தில் நடைபவனி நிறைவடைந்த மறுகணம் நடைபெற்றது.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் பவளவிழா நடைபவனி கடந்த (16) சனிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாபெரும் பவளவிழா நடைபவனியில் 43 வருடங்களில் பயின்ற மாணவர் அணியினர் அலங்கரிக்கப்பட்ட வாகனங்கள் சகிதம் தனித்துவமான சீருடையுடன் கலந்து கொண்டனர்.

இறுதிவரைக்கும்ஒழுக்கம்பேணிகட்டுப்பாட்டுடன் 10 நிபந்தனைகளை பூர்த்தி செய்த முதல் மூன்று அணிகளுக்கு பரிசு, பாராட்டு வழங்கப்பட்டன.

பரிசளிப்பு விழா சங்கத்தின் தலைவரும் கல்லூரி அதிபருமான ம.சுந்தரராஜன் தலைமையில், பழைய மாணவர் சங்கத்தின் ஆலோசகரும், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜாவின் நெறியாழ்கையில் நடைபெற்றது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர், ஆலோசகர், செயலாளர் லோ. சுலக்ஷன், பதில் பொருளாளர் வி.குகனேந்திரராஜா, உப செயலாளர் எஸ்.டனிஸ் காந்த், உள்ளிட்ட நிர்வாக சபையினர் செயற்படுத்தினர்.

அணிகளிடையே சிறந்த மூன்று அணிகளைத் தெரிவு செய்ய ஓய்வு நிலை அதிபர்களான தி.வித்யாராஜன், இ.ரகுபதி, பா.சந்திரேஸ்வரன், கே . புண்ணியநேசன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.சுந்தரமனோகரன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.










# தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாடு; தொண்டர்களால் நிரம்பியது மதுரை



தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநாடு, மதுரை-தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பாரப்பத்தி என்ற பகுதியில் இன்று பிற்பகல் 3.15 அளவில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் பங்கேற்பார்கள் என்பதால் அதற்கான ஏற்பாடுகள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெற்று வருகின்றது.

இதுவரை தமிழகத்தில் நடந்த எந்த ஒரு கட்சி மாநாடும், இந்த அளவுக்குப் பிரம்மாண்டமான மைதானத்தில் நடைபெறவில்லை. இந்த அந்நிலையில், மாநாட்டு அறிவிப்பைத் தொடர்ந்து அதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வந்தது.

500 ஏக்கருக்கும் மேல் பரப்பளவு கொண்ட மைதானத்தில், 250 ஏக்கர் மாநாடு நடைபெறும் இடமாகவும், மீதமிருக்கும் 300 ஏக்கர் நிலம் வாகனங்கள் நிறுத்தும் இடமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மாநாடு நடைபெறும் இடங்களில் ஆங்காங்கே பிரம்மாண்ட எல்.இ.டி.விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொண்டர்கள் அமர, பச்சை கம்பளம் விரித்து, அதில் 2 இலட்சம் கதிரைகளும், வி.ஐ.பி.க்கள் அமர சிவப்பு கம்பளம் விரித்து அதில் 300 கதிரைகளும் போடப்பட்டுள்ளன.

அதேபோன்று, வாகன நெரிசல் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், ஒரே நேரத்தில் வாகனங்களை வெளியே அனுப்பாமல் நெறிப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாநாட்டில் பொதுமக்கள் மற்றும் தொண்டர்களைக் கட்டுப்படுத்தவும் காவல்துறைக்கு உதவியாக இருக்கவும் த.வெ.க. நிர்வாகிகளே பல்வேறு குழுக்கள் அமைத்துள்ளனர்.

மாநாட்டின் மேடைகளில் த.வெ.க. நிர்வாகிகள் அனைவரும் அமரும் வகையில், சுமார் 216 மீட்டர் பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டுள்ளது.

விஜய் 300 மீட்டர் வரை நடந்து சென்று தொண்டர்களை அருகில் சந்திக்க நடை மேடை அமைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, 600 பேர் கொண்ட மருத்துவக்குழுவில் 250 வைத்தியர்கள், 250 தாதியர்கள் பணியில் உள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பாக அமர்ந்து மாநாடு நிகழ்வுகளைப் பார்க்கும் வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவை தவிர குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்டவை சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன.

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாட்டில் விஜய்யின் குரலில் உருவான, அக்கட்சியின் கொள்கைப் பாடல் வெளியிடப்பட்டது.

இந்தப் பாடலானது, த.வெ.க. தலைவர் விஜய்யின் குரலில் உருவாகியுள்ள நிலையில், 'உங்க விஜய் வரேன்', 'பெரியாரின் பேரன் வரான்', 'எளியவர்களின் குரல்' போன்ற வரிகள் இடம்பெற்றுள்ளன.

இப்பாடலானது, பின்னணியில் ஒலிக்க த.வெ.க. தலைவர் விஜய் மாநாட்டின் அரங்கிற்கு வருகை தந்தார். அப்போது, அங்கு அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக நடைமேடையில் தொண்டர்களின் ஆராவாரத்துக்கு மத்தியில் தவெக கொடியை தலையில் கட்டிக்கொண்டு நடந்து வந்தார்.

இந்நிலையில், மாநாட்டு மேடையில் நடந்துவந்த வந்த விஜயை நெருங்க, தடுப்புகளை தாண்டி தொண்டர்கள் மேலே ஏறியதால் அதிர்ச்சி ஏற்பட்டது.

தடுப்புகளை உடைக்கவும் முயன்றனர். சட்டென விஜய் காலை பிடித்தபடி அலறிய தொண்டரால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.












# திருப்பனந்தாள் மடத்தின் அதிபர் தம்பிரான் சுவாமி முக்தியடைந்தார்

திருப்பனந்தாள் மடத்தின் 21 ஆவது அதிபரான ஸ்ரீலஸ்ரீ முத்துக் குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள் செவ்வாய்க்கிழமை முக்தி அடைந் தார்.

திருப்பனந்தாள் காசிமடத்தின் 21 ஆவது அதிபரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் என்னும் முத்துக்குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள் (வயது 95) செவ்வாய்க் கிழமை முக்தி அடைந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்ப கோணம் அருகேயுள்ள திருவிடை மருதூர் தாலுக்கா திருப்பனந்தாளில் காசி திருமடத்துக்கு காசியில் மிகப் பெரிய கோயில் உள்ளது. இங்கு சைவம் தமிழ், கலை, இலக்கிய சமூக, சமுதாயப் பணிகளை ஆற்றிவரும், அறம் வளர்க்கும் அருள் நிலையம் உள்ளது.

இந்த மடத்தின் 21 ஆவது அதிபராக கயிலை மாமுனிவ ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் எனும் முத்துக் குமார தம்பிரான் சுவாமிகள் (வயது 95). இவர் 1958 முதல் துறவேற்று, சிறிது காலம் ஸ்ரீகாசி மடத்தின் இள வரசாகப் பணிபுரிந்து, கடந்த 1972 இல் ஸ்ரீகாசி மடத்தின் அதிபரானார். சைவம், தமிழ் இரண்டையும் இரண்டு கண்களாகப் போற்றி, 50 ஆண்டுகளுக் கும் மேலாக, திருமுறைகளை நாள் தோறும் இடையீடின்றிப் பாராயணம் செய்து வந்தார்.

300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையும் பெருமையும் மிக்க காசிமட வரலாற்றில் பல்துறை விரி வாக்கம் பெற்று வளர்ச்சி கண்டு பொற்காலம் என்று சுட்டிப் பாராட்டும் வகையில் மேம்பாடு அடையச் செய்தவர் இவர்.

இந்நிலையில் கடந்த ஒரு மாத மாக வயது மூப்பால் உடல் நலம் குன்றி சிகிச்சை பெற்று வந்த சுவா மிகள் திருப்பனந்தாள் மடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு மகா சமாதி அடைந் தார். இவரது நல்லடக்கம் மேற்குத் தெருவில் உள்ள குரு மடத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்நிலையில், ஸ்ரீலஸ்ரீ முத்துக் குமாரசுவாமி முக்தி அடைந்தது மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.



# திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க ஏ.ஐ. தொழில்நுட்பம்

திருப்பதி ஏழுமலையானை விரை வாக தரிசனம் செய்ய ஏ.ஐ. தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

திருமலை திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர். நாயுடு நேற்று ஹைதராபாத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக் கையில்,

"முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆலோசனைப்படி, கடப்பா மாவட்டம், ஒண்டிமிட்டா ஸ்ரீ கோதண்டராமர் கோயிலில் நித்ய அன்னதானம் வழங் கப்படுகிறது. இதற்காக திருப்பதி தேவஸ்தானம் 4 கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த ஜெகன் ஆட்சியில் திரு மலையில் அவரது கட்சிக்காரர்கள் 12 பேருக்கு ஹோட்டல்கள் ஒதுக்கப் பட்டன. இந்த ஒதுக்கீடு ரத்து செய் யப்பட்டு, இ-டெண்டர் மூலம் ஹோட் டல்களை ஒதுக்கி உள்ளோம்.

ஸ்ரீவாணி அறக்கட்டளை தரிசன நேரத்தை மாற்றி உள்ளோம். காலை யில் டிக்கெட் பெற்ற பக்தர்களுக்கு அன்று மாலை சுவாமி தரிசனம் கிடைத்து விடும்.

ஏழுமலையானை பக்தர்கள் விரை வாக தரிசனம் செய்ய ஏ.ஐ. தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும். இதன் மூலம் ஏழுமலையானை 1 முதல் 2 மணி நேரத்துக்குள் பக்தர்கள் தரி சனம் செய்யலாம். இதற்கான ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

ஏழுமலையான் தரிசனம், பிரசாத விற்பனை தொடர்பாக சைபர் குற் றங்கள் நடைபெற்று வருகிறது. இதனை தடுக்க திருமலையில் சைபர் செக்யூரிட்டி லாப் தொடங்கப்பட உள்ளது." - என்றார்.




# அரசியல் சவால்களை எதிர்கொள்ள ஆக்கபூர்வ அணுகுமுறை வேண்டும்

## ரஷ்யாவில் எஸ். ஜெய்சங்கர் தெரிவிப்பு

இந்தியாவும் ரஷ்யாவும் சிக்கலான புவிசார் அரசியல் சவால்களை எதிர்கொள்ள ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான அணுகுமுறையைக் கொண்டு வர வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் மசகு எண்ணெய் வாங்குவது தொடர்பாக வொஷிங்டனுடனான புது டில்லியின் உறவுகளில் அதிகரித்து வரும் அழுத்தங்களுக்கு மத்தியில் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

மொஸ்கோவில் ரஷ்யாவின் முதல் துணைப் பிரதமர் டெனிஸ் மந்துரோவ் உடனான சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தனது உரையில் வெளிவிவகார அமைச்சர், ரஷ்ய நிறுவனங்கள் இந்தியப் பங்காளிகளுடன் இன்னும் தீவிரமாக பணியாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்தியப் பொருள்களின் மீதான வரிகளை இரட்டிப்பாக்கி 50 சதவீதமாக உயர்த்திய பின்னர், இந்தியா ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் வாங்குவதற்கு 25 சதவீத கூடுதல் வரிகள் உட்பட, புதுடில்லிக்கும், வொஷிங்டனுக்கும் இடையிலான உறவுகளில் ஏற்பட்ட சரிவின் பின்னணியில் இந்தக் கருத்துக்கள் வந்தன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் செவ்வாய்க்கிழமை மூன்று நாள் பயணமாக ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜெய்சங்கர்-மந்துரோவ் பேச்சுவார்த்தைகள் இந்தியா-ரஷ்யா வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்புக்கான அரசுகளுக்கிடையேயான ஆணையத்தின் கட்டமைப்பின் கீழ் நடைபெற்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தியா - ரஷ்யா வர்த்தகம் ஐந்து மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

2021 இல் 13 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2024-25 இல் 68 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

இதற்கு பெரும்பாலும் இந்திய ரஷ்ய ஹைட்ரோகார்பன் இறக்குமதியின் பின்னணியில் உள்ளது.

புது டில்லியல் உள்ள ரஷ்ய தூதரகம் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த வளர்ச்சியை 700 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.





# காசா நகரம் முழுவதையும் கைப்பற்றுவதற்கு தரைவழித் தாக்குதலை ஆரம்பித்த இஸ்ரேல்

காசா நகரம் முழுவதையும் கைப்பற்றி ஆக்கிரமிக்கும் திட்டத்தின் கீழ், தரைவழித் தாக்குதலின் முதற் கட்ட நடவடிக்கைகளை இஸ்ரேலிய இராணுவம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், காசாவின் புற நகர்ப் பகுதிகள் ஏற்கனவே தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

தாக்குதலுக்கான அடித்தளத்தை அமைப்பதற்காக ஜெய்டவுன் மற்றும் ஜபாலியா பகுதிகளில் துருப்புக்கள் ஏற்கனவே செயலில் ஈடுபட்டுள்ளதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் ஒப்புதலை வழங்கியிருந்த நிலையிலேயே தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்காக சுமார் 60,000 மேலதிகப் படையினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

காசா நகரில் உள்ள லட்சக்கணக்கான பாலஸ்தீனியர்கள் வெளியேறி, தெற்கு காசாவில் உள்ள தங்குமிடங்களுக்குச் செல்ல இஸ்ரேல் உத்தரவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் அப்பாவி பொது மக்களுக்கு எதிரான கொடூரமான போரை ஆரம்பிப்பதற்காகவே, இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நிராகரித்து வருவதாக ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது.

அதேநேரம், இஸ்ரேலின் பல நட்பு நாடுகள், காசாவை கைப்பற்றும் நடவடிக்கையை மீண்டும் கண்டித்துள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், இது பொதுமக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்துவதுடன், முழு பிராந்தியத்தையும் நிரந்தர போரின் சுழற்சியில் தள்ளும் என்று எச்சரித்துள்ளார்.





# அமெரிக்காவின் பிரபல நீதிபதி பிராங்க் காப்ரியோ காலமானார்

நீதிமன்றத்தின் கருணையுள்ள தீர்ப்புகளுக்காக இணையத்தில் பிரபலமான அமெரிக்க நீதிபதியான பிராங்க் காப்ரியோ காலமானார். இறக்கும் போது அவருக்கு 88 வயது.

அவரது அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

"ரோட் தீவின் பிராவிடன்ஸின் முன்னாள் நீதிபதி காப்ரியோ, கணையப் புற்றுநோயுடன் நீண்ட போராட்டத்திற்குப் பிறகு அமைதியாகக் காலமானார்.



நீதிபதி காப்ரியோ தனது இரக்கம், பணிவு மற்றும் மக்களின் நன்மையில் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகியவற்றால் பலரால் நேசிக்கப்பட்டார்.

அவரது அரவணைப்பும் கருணையும் அவரை அறிந்த அனைவருக்கும் ஒரு அழியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார்." என்று கூறப்பட்டுள்ளது.

காட் இன் பிராவிடன்ஸ் என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் பிராங்க் காப்ரியோ உலகளவில் பிரபலமானார்.

இந்த நிகழ்ச்சியில், நீதிமன்றத்திற்கு வரும் மக்களிடம் அவர் காட்டிய மனிதாபிமான மற்றும் இரக்கமுள்ள அணுகுமுறையால் பலரின் இதயங்களை வென்றார்.மேலும் அவரது நீதித்துறை முடி வுகள் சமூக ஊடகங்களில் மில்லியன் கணக்கான மக்களின் கவனத்தை ஈர்த்தன.

கனடா முரசு
வியாழக்கிழமை 21/08/2025

நாசா – கனடா இணைந்து புதிய நிலா கண்டுபிடிப்பு


02



# நீண்டகாலத் தலைவர் எலிசபெத் மே பசுமைக் கட்சியில் செயற்படமாட்டார்

**கனடாவின் பசுமைக் கட்சியின் நீண்ட காலத் தலைவரான எலிசபெத் மே எதிர்வரும் தேர்தலில் கட்சியை வழி நடத்தப் போவதில்லை என அறி வித்துள்ளார்.**

**இதன் காரணமாக கட்சி மீண்டும் புதிய தலைவரைத் தேடும் நடவடிக்க கைளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.**

கட்சி உறுப்பினர்களுக்கு அனுப் பிய மின்னஞ்சலில், புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை தாம் நாடாளுமன்ற உறுப்பினராகவும், கட் சித் தலைவராகவும் தொடர்ந்து பணி யாற்ற உள்ளதாக மே தெரிவித்தார்.

2025 இலையுதிர் கால நாடாளு மன்ற அமர்வுக்கு பெரிய திட்டங்கள் வகுத்துள்ளோம் என மே தனது மின்னஞ்சலில் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒரே பசுமைக் கட்சி உறுப்பினராக இருக்கும் 02

# ஒக்வில்லில் விபத்து; முதியவர் பருகாயம்

கனடாவின் ஒக்வில்லில் உள்ள கடைத்தொகுதி அருகே இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 67 வயது முதியவர் வாகனம் ஒன் றால் மோதப்பட்டு பலத்த காயங்க ளுடன் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

ரெபேக்கா தெரு மற்றும் தேர்ட் லைன் கிழக்கு பகுதியில் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஹால்டன் பிராந்திய பொலிஸார் இது குறித்த தகவல்களை வெளி யிட்டுள்ளனர்.


மேற்கு நோக்கி ரெபேக்கா தெரு வில் சைக்கிளில் சென்று கொண்டி ருந்த அந்த முதியவர், சவுத் ஒக்வில்




சென்டரின் வாகன நிறுத்துமிடத்திற்கு இடது புறமாக திரும்ப முயன்ற ஒரு ஹேட்ச்பேக் வாகனத்தால் மோதப்பட் டார் என்று பொலிஸ் தெரிவித்தது.

பாதிக்கப்பட்ட முதியவர் உடனடி யாக புரோக் சிகிச்சை மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் விசா ரணை முன்னெடுக்கப்பட்டு வரு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 02




# நாசா - கனடா இணைந்து புதிய நிலா கண்டுபிடிப்பு

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நாசா, கனடா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் பொருள் செலவில் அதிநவீன சக்தி வாய்ந்த தொலைநோக்கியான ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியை உருவாக்கி விண்ணில் நிலைநிறுத்தி விண் வெளியை ஆராய்ந்து வரு கின்றனர். பால்வெளி மண்டலத்தில் 7 ஆவது கிரகமாக யுரேனசை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஆராய்ந்து வருகிறது.

ஏற்கனவே 28 நிலாக்களை யுரே னஸ் கொண்டுள்ளது. இந்தநிலையில் யுரேனஸ் கிரகத்தை மேலும் ஒரு நிலா சுற்றி வருவதை வெப் தொலை நோக்கி கண்டுபிடித்துள்ளது.

இதனால் யுரேனஸ் நிலாக்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. புதிய நிலாவுக்கு நாசா சார்பில் இன் னும் பெயர் வைக்கப்படவில்லை.

# திடீரென கனடா வந்திறங்கினார் உலக கோடீஸ்வரர் எலான் மஸ்க்

உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கும் எலான் மஸ்க் திடீரென கனடா வந்திறங்கிய விட யம் கவனம் ஈர்த்துள்ளது.

எலான் மஸ்க், தென்னாப் பிரிக்காவிலுள்ள Pretoria என்னு மிடத்தில் பிறந்தவர் ஆவார். ஆனால், அவரது தாயான Maye Musk, கனடாவின் சஸ்காட்செவன் மாகாணத்திலுள்ள ரெஜைனா நகரில் பிறந்தவர் ஆவார்.

தனது தாய் மூலமாக கனேடிய குடியுரிமை பெற்றவர் எலான் மஸ்க்.

பதின்மவயதில் கனடாவுக்கு குடி பெயர்ந்த எலான் மஸ்க், தனது வாழ் வின் ஆரம்ப காலத்தின் பெரும்பகு தியை சஸ்காட்செவனிலும் வான்கூவ ரிலும் செலவிட்டார். அத்துடன், அவர் ஒன்ராறியோவிலுள்ள குயின்ஸ் பல்கலையில் கல்வியும் கற்றார்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழ மையன்று எலான் மஸ்க் தனது சொந்த விமானம் ஒன்றில் திடீரென



பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள பெல்லா பெல்லா என்னும் சிறிய நகரத்துக்கு வருகை புரிந்தார்.

எலான் மஸ்கின் கனடா வருகை கவனம் ஈர்த்துள்ள நிலையில், அவர் எதற்காக திடீரென கனடா வந்தார் என்பது குறித்து மக்கள் தங்கள் யூகங்களை வெளிப்படுத்தியுள் ளார்கள்.

அதாவது, பெல்லா கூலா என்னு மிடத்தில், ஊடக ஜாம்பவானான ரூபர்ட் முர்டோக்கின் மகனான ஜேம்ஸ் முர்டோக்குக்கு சொந்தமான இடம் ஒன்று உள்ளது.

அவர், டெஸ்லா போர்டின் உறுப்பி னரும் ஆவார். ஆக, எலான் மஸ்க் அங்கு சென்றிருக்கக்கூடும் என உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

## நீண்டகாலத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது குரல், தலைவராக இருப்பதன் மூலம் மேலும் வலிமையடைகிறது என தெரிவித்துள்ளார்.

கட்சியின் நாடாளுமன்றக் குழுவை விரிவுபடுத்துவதற்கு முன் னர் பதவி விலகுவதற்கு திட்டமிட் டுள்ளதாகவும், பருவநிலை நெருக்கடி, பொருளாதார மலிவு, மற்றும் மோதல் பகுதிகளில் நீதி மற்றும் அமைதி ஆகியவற்றில் கவனம் செலுத்து வதாகவும் மே குறிப்பிட்டார்.

தலைவராக தனது முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாக நிதி திரட்டு தலை எப்போதும் கருதுவதாகவும், 2025 ஆம் ஆண்டை வலுவான நிதி நிலை யில் முடிப்பதற்கு தீவிரமாக உழைப் பதாகவும் மே தெரிவித்துள்ளார்.

அண்மைய தேர்தல்களில் பசு மைக் கட்சி குறிப்பிடக்கூடிய பெறு பேறுகளை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.